20 மாடிகளுடன் அமைக்கப்படவுள்ளது

# சென்ட்ரல் மெட்ரோ ரயில்நிலையத்தில் ரூ.400 கோடியில் வணிக வளாகம்

சென்னை, செப். 3-

சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் ரூ.400 கோடி செலவில் 20 மாடிகளுடன் கூடிய பிரம்மாண்ட வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் தற்போது தொடங்கியுள்ளன. இயற்கை காட்சிகள், பாதசாரிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த டெண்டர் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் கோரும் நிறுவனம் 17 மாதங்களில் பணிகளை முடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் மிகப் பெரிய ரயில் நிலையமாக விளங்குகிறது. இங்கு உலக தரத்தில் ரூ.400 கோடி செலவில் 20 மாடிகளுடன் பிரம்மாண்ட வணிக வளாக வசதிகளுடன் மத்திய சதுக்கம் அமைக்கப்படவுள்ளன. சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதி உதவியுடன் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ரிப்பன் மாளிகை, விக்டோரியா கூடம், சென்ட்ரல் ரயில் நிலையம், அரசு பொது மருத்துவமனை ஆகிய இடங்களுக்கு நடுவில் சென்ட்ரல் சதுக்க கட்டடம் அமைக்கப்பட உள்ளது.

அழகுபடுத்தலின் ஒரு பகுதியாக, மரக்கூரை, புல்வெளி, பாதசாரிகள் அமரும் பகுதி, நடைபாதைகள், பாதசாரிகள் செல்வதற்காக புதிய இரண்டு சுரங்கப்பாதைகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பணிகள் தற்போது தொடங்கியுள்ளன. 20 மாடி கட்டடத்தில் பொதுமக்கள் வசதிக்காக பிரம்மாண்ட வணிக வளாகம் உருவாக்கப்படவுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த புல்வெளிப் பூங்கா, நிலத்தடி வாகன நிறுத்துமிடம், பயணிகள் சுரங்கப்பாதைகள் என பல வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. வாகன நிறுத்துமிடத்தில் ஒரே நேரத்தில் 800 கார்களை நிறுத்தலாம். பூமிக்கடியில் 3 அடுக்கு கார் நிறுத்துமிடம் கட்டப்படவுள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறுகையில், ரூ.400 கோடி மதிப்பிலான சென்ட்ரல் மெட்ரோ சதுக்கம் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில், 20 மாடிகளுடன் கூடிய வணிக வளாகம், அலுவலகங்கள் கட்டப்படவுள்ளன. பூமிக்கடியில் 3 அடுக்கு கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 800 கார்களை நிறுத்தலாம். மத்திய சதுக்கத்தை நகரின் முக்கிய இட அடையாளமாக அமைக்க திட்டமிட்டுள்ளோம். பாதசாரிகள் சாலையைக் கடப்பதற்கு சுரங்கப்பாதை வசதிகளை பயன்படுத்தும் வகையில், நவீன போக்குவரத்து முறை அமைக்கும் யோசனையும் உள்ளது. பொதுமக்கள், பயணிகளுக்காக பல்வேறு சிறப்பு வசதிகள் அமைக்கப்படும். மத்திய சதுக்கம் வந்தபிறகு, பயணிகள் பேருந்திலோ, ரயிலிலோ எங்கு, எந்த போக்குவரத்தையும் எளிதாக பெற முடியும். 17 மாதத்துக்குள் கட்டுமான பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.